**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. AVS TECH BUILDING SOLUTIONS INDIA PVT LTD, LEASE OVER AN EXTENT OF 2.20.0 HA LOCATED AT SF.NO. 662 (P), THORAPALLI AGRAHARAM VILLAGE, HOSUR TALUK, KRISHNAGIRI DISTRICT ON 17.10.2023 AT 11.00 AM AT M/S. SRI SATHYA SAI MARRIAGE HALL, SIPCOT SERVICE ROAD, SIPCOT PHASE II, MORANAPALLI, HOSUR – 635 109.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru. A. Sadhanai kural | : | District Revenue Officer, Krishnagiri. (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. R. Venkatesan., M.E., | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District. |
| 3 | Er. P. Krishnan | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District. |
| 4 | Thiru. K. Ashok Kumar | : | The Manager, M/s. AVS Tech Building Solutions Pvt Limited |
| 5 | Thiru. M. Sheik Nawas | : | EIA Consultant, M/s. Geo Exploration and Mining Solutions Limited, Salem |
| | Public | : | 61 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the District Revenue Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed project of rough stone quarry of M/s. AVS Tech Building Solutions India Pvt Ltd, Lease over an Extent of 2.20.0 Ha Located at SF.No. 662 (P), Thorapalli

Agraharam Village, Hosur Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as "Dinathanthi" and "The New Indian Express" dated 13.09.2023 and bit notices regarding public hearing was issued to the public of P.S Thorapalli Village, Amalati Village, Kumudepalli Village and Islampur Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The District Revenue Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the District Revenue Officer, Krishnagiri has requested the project proponent to explain about their proposed Rough Stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru. M. Sheik Nawas, EIA Consultant, M/s. Geo Exploration and Mining Solutions Limited, Salem of the proposed Rough Stone quarry project has made presentation about the proposed Rough Stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Rough Stone quarry project. The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. Jawahar, Thorapalli Village:**

Thiru. Jawahar said that, I was worked as Quarry In charge at M/s. AVS Tech Building Solutions Pvt Limited. At present, as this quarry is not in operation, I am working outside of the town. He requested that if the quarry project is granted, employment will be available for me in this village.

2. **Thiru. Mahadevan, Thammanayakanapalli Village:**

Thiru. Mahadevan has said that, I have been working as a contractor for M/s. AVS Tech Building Solutions Pvt Limited for past 1.5 years with employing 15 people. Now there is no job opportunity due to non-operation of the quarry. At present, we are farming. But there is no profit in agriculture. Also, there is no constant flow of water in the river. So, everyone is going to daily wages. That job is also not available properly. He said that, by granting permission for this quarry, we will regain our livelihood.

3. **Thiru. Siva Kumar, Amalati Village:**

Thiru. Siva Kumar has said that, I was working as truck driver in M/s. AVS Tech Building Solutions Pvt Limited. Now, due to unemployment, we are going to work as masons and doing small jobs. Now if the quarry project has granted, the drivers and educated youth in the Amalati village will get job opportunities in local. Therefore, he welcomed the quarry project of M/s. AVS Tech Building Solutions Pvt Limited.

4. **Thiru. Kuppusamy, Islampur Village:**

Thiru. Kuppusamy has said that, my house is located near the already existing quarry. My house gets damaged during blasting in the quarry. Also, health is affected due to dust. Due to operation of the quarry, goats and cows cannot be grazed and agriculture cannot be done. Therefore, the quarry should be operated in such a way that dust does not emanating. Also, after the permission of the quarry, he requested that the blasting should be carried out with reduced noise level. Further, the quarry should be operated without creating dust and without

generating high frequency vibration, which lead to damage the house. In Power Point Presentation, they explained that, quarry project is located 1 km away from Islampur village. However, he said that, the quarry is only 500 meters away from Islampur village.

**5. Thiru. Mohamad Basha, Islampur Village:**

Thiru. Mohamad Basha has said that, my agricultural land is located near the quarry project. There is a grazing land for goats and cows. There, the dust coming out of the quarry falls on the pasture grasses, so that the cows are not able to eat the grasses. This affects the livelihood of our village. He requested to provide alternate or solution for this problem.

**Reply:**

Mr. Sheik Nawas, GEMS, Salem, EIA Consultant of the M/s. AVS Tech Building Solutions Pvt Limited has replied that, we will develop green belt so that the dust does not rise during quarry operation and blasting time. Further, we will cover the trucks with tarpaulins, when the trucks carrying mined stones and when the movement of trucks, the dust will be controlled by sprinkling water on roads with water sprinklers.

**6. Thiru. Siva Kuamr, Moranapalli Village:**

Thiru. Siva Kumar has said that, I was working at M/s. AVS Tech Building Solutions Pvt Limited till last year. I am currently unemployed. He said that if permission is granted for this quarry project, I will get employment.

**7. Thiru. Rama Moorthy, President, Thorapalli Village:**

Thiru. Rama Moorthy has said that, CSR Fund of M/s. AVS Tech Building Solutions Pvt Limited was not provided to Thorapalli Panchayat. Only once, they provided the fund for development of RO WATER tank. He said that, the entire CSR FUND shall be utilized for Thorapalli Panchayat. Also, road facilities should be provided through this quarry's CSR fund and this is our 5-year long demand.

**Reply:**

Mr. Sheik Nawas, GEMS, Salem, EIA Consultant of the M/s. AVS Tech Building Solutions Pvt Limited has replied that, the CSR fund of Rs. 5 Lakhs will be spent only for this village. Further, he said that, this fund will be utilized for the government school located in the village.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 4 number of petition were received on the proposed M/s. AVS Tech Building Solutions India Pvt Ltd Quarry project during the public hearing meeting.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed M/s. AVS Tech Building Solutions India Pvt Ltd Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

25/10/2023

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

25/10/2023

**District Revenue Officer**
**Krishnagiri**

4/7

**District Collector**
**Krishnagiri**

4/7

**திரு/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட், சர்வே. எண்.662 (பகுதி), தொரப்பள்ளி அக்ரஹாரம் கிராமம், ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 2.20.0 ஹெக்டர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 17.10.2023 அன்று சிப்காட் சர்வீஸ் ரோடு, சிப்காட் 2 வது வளாகம், மோரனப்பள்ளி, ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள திரு/ள். . ஸ்ரீ சத்யா சாய் கல்யாண மண்டபத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.அ.சாதனைக் குறள் | : | மாவட்ட வருவாய் அலுவலர்<br>கிருஷ்ணகிரி மாவட்டம்<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. R. வெங்கடேசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.P.கிருஷ்ணன் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு. K. அசோக்குமார், | : | மேலாளர்<br>திரு/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் |
| 5 | திரு.M.ஷேக் நவாஸ் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>திரு/ள்.ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம். |
| | பொதுமக்கள் | : | 61 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் ரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி அவர்கள், பொதுமக்கள் மற்றும் தி/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் ரப் ஸ்டோன் குவாரியின் மேலாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 13.09.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும் பி.எ.ஸ். தொரப்பள்ளி கிராமம், அமலட்டி கிராமம், இஸ்லாம்பூர் கிராமம், குமுதேப்பள்ளி கிராமம், ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். தி/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் மேலாளர் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.M.ஷேக் நவாஸ், தி/ள்.ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம்., அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. ஜவகர், தொரப்பள்ளி கிராமம்:**

திரு. ஜவகர் அவர்கள், தான் தி/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் நிறுவனத்தில் குவாரி பொறுப்பாளராக (INCHARGE) பணியாற்றி வந்தேன்.

தற்பொழுது இக்குவாரியானது இயக்கத்தில் இல்லாத காரணத்தினால் வெளியூரில் பணி செய்கிறேன். இக்குவாரி திட்டத்திற்கு அனுமதி கிடைத்தால் இந்த ஊரிலே எனக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கேட்டுக்கொண்டார்.

**2. திரு. மகாதேவன், தம்மநாயக்கனப்பள்ளி கிராமம்:**

திரு. மகாதேவன் அவர்கள், தி/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் என்ற குவாரி நிறுவனத்தில் 1.5 வருடங்களாக ஒப்பந்ததாராக, 15 நபர்களை வேலைக்கு எடுத்து பணி செய்து வந்தேன். இப்பொழுது இயக்கத்தில் இல்லாத காரணத்தினால் வேலை வாய்ப்பு எதும் இல்லை. தற்பொழுது நாங்கள் விவசாயம் செய்து வருகிறோம். ஆனால் விவசாயத்தில் லாபம் கிடைப்பதில்லை. மேலும், ஆற்றிலும் நீர்வரத்து இல்லை. அதனால், அனைவரும் கூலி வேலைக்கு சென்று வருகிறோம். அந்த கூலி வேலையும் தற்போது எதுவும் கிடைப்பதில்லை. குவாரிக்கு அனுமதி வழங்குவதன் மூலம் எங்களுக்கு மீண்டும் வாழ்வதாரம் கிடைக்கும் என்று கூறினார்.

**3. திரு. சிவக்குமார், அமலட்டி கிராமம்:**

திரு. சிவக்குமார் அவர்கள், தி/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் என்ற நிறுவனத்தில் கனரக வாகன ஓட்டுநராக பணிபுரிந்து வந்தேன். இப்பொழுது வேலையில்லா காரணத்தினால் மேஸ்திரி வேலைக்கும், சிறு சிறு வேலைக்கும் சென்று கொண்டிருக்கிறோம். இப்பொழுது இக்குவாரி வந்தால் அமலட்டி கிராமத்தில் உள்ள ஓட்டுநர்களுக்கும், படித்த இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார். ஆகவே, தி/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் என்ற குவாரி நிறுவனம் வருவதை தான் வரவேற்பதாக தெரிவித்தார்.

**4. திரு.குப்புசாமி, இஸ்லாம்பூர் கிராமம்:**

திரு. குப்புசாமி அவர்கள், எனது வீடு குவாரிக்கு அருகிலுள்ளது. குவாரியில் வெடிவைக்கும் பொழுது எனது வீட்டுக்கு சேதம் ஏற்படுகிறது. மேலும், தூசி வருவதினால் உடல்நிலை பாதிப்படைகிறது. குவாரி செயல்பட்டால் ஆடு, மாடு மேய்க்க முடிவதில்லை மற்றும் விவசாயம் செய்ய முடியவில்லை. ஆகவே தூசு எழும்பாத வண்ணம் குவாரி செயல்பட வேண்டும். மேலும், இக்குவாரியின் அனுமதிக்கு பிறகு குவாரி செயல்பாட்டின் போது வெடி சத்தத்தின் அளவை குறைத்தும், தூசி ஏற்படாமலும், எங்களது வீடு அதிர்வுறாமல் வெடி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும், குவாரியின் அமைவிடமானது இஸ்லாம்பூர் கிராமத்திலிருந்து 1 கிலோ மீட்டர் கொலைவில் அமைந்துள்ள என்று விளக்கக் காட்சியில் தெரிவித்தார்கள். ஆனால், இக்குவாரியானது 500 மீட்டர் தொலைவில் தான் அமைந்துள்ளது என்று தெரிவித்தார்.

**5. திரு.முகமது பாஷா, இஸ்லாம்பூர் கிராமம்:**

திரு. முகமது பாஷா அவர்கள், தி/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் என்ற குவாரி நிறுவனத்தின் அருகில் என்னுடைய விவசாய நிலம் அமைந்துள்ளது. அங்கு ஆடு, மாடுகளுக்கான மேய்ச்சல் நிலம் அமைந்துள்ளது. அங்கு இக்குவாரியிலிருந்து வெளிவரும் தூசியானது மேய்ச்சல் நில புற்களின் மீது விழுவதால் மாடுகள் புற்களை உண்ண இயலவில்லை. இதனால் வாழ்வதாரம் பாதிப்படைகிறது. இதற்கு மாற்று வழிகள்/தீர்வினை ஏற்படுத்தி தருமாறு கேட்டுக் கொண்டார்.

**பதில் :**

தி/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.M.ஷேக் நவாஸ், தி/ள்.ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம்.,

அவர்கள் குவாரியில் நாம் வெடி வைக்கும் பொழுது தூசு எழும்பா வண்ணம் பசுமை வளையம் அமைத்தும், கனரக வாகனங்கள் கற்களை ஏற்றிச் செல்லும் பொழுதும் தார்ப்பாலின்கள் மூலம் மூடியும், கனரக வாகனங்கள் செல்லும் பொழுது, நீர்தெளிப்பான் மூலம் நீர்தெளித்தும் தூசு வராமல் கட்டுப்படுத்தப்படும் என்று கூறினார்.

**6. திரு.சிவக்குமார், மோரனப்பள்ளி கிராமம்:**

திரு. சிவக்குமார் அவர்கள், நான் முந்தைய வருடம் வரை தி/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தேன். நான் தற்பொழுது வேலை எதுவும் இல்லாமல் இருக்கிறேன். இக்குவாரிக்கு அனுமதி வழங்கும் பட்சத்தில் எனக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவித்தார்.

**7. திரு. ராமமூர்த்தி, தொரப்பள்ளி பஞ்சாயத்து தலைவர்:**

திரு. ராமமூர்த்தி அவர்கள், தி/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் நிறுவனத்தின் சமூக நல நிதியை (CSR FUND) தொரப்பள்ளி பஞ்சாயத்திற்கு வழங்கவில்லை. ஒரே ஒரு முறைதான் RO WATER மேம்பாட்டிற்காக வழங்கினார்கள். சமூக நல நிதி(CSR FUND) முழுவதையும் தொரப்பள்ளி பஞ்சாயத்திற்கே பயன்படுத்த வேண்டும் என்று கூறினார். மேலும், இந்நிறுவனத்தின் மூலமும் சாலை வசதி செய்து தரவேண்டும். இது, எங்களது 5 ஆண்டுகால கோரிக்கை என்றும் தெரிவித்தார்.

**பதில் :**

தி/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.M.ஷேக் நவாஸ், தி/ள்.ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம், அவர்கள் சமூக நல நிதியை (CSR FUND) தொகையானது இக்கிராமத்திற்கு

மட்டும்தான் செலவிடப்படும். சமூக நல நிதி (CSR FUND) தொகையானது 5 லட்சம் ஆகும். இத்தொகையானது இக்கிராமத்தில் உள்ள அரசாங்க பள்ளிக்கு மட்டுமே செலவிடப்படும் என்று தெரிவித்தார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து 4 மனுக்கள் பெறப்பட்டது.

மேலும், தி/ள். A.V.S டெக் பில்டிங் சொல்யூசன்ஸ் இந்தியா பி லிமிடெட் உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

25/10/2023

| | | |
|---|---|---|
| **மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**<br>**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**<br>**ஓசூர்** | **மாவட்ட வருவாய் அலுவலர்**<br>**கிருஷ்ணகிரி**<br>5/7 | **மாவட்ட ஆட்சியர்**<br>**கிருஷ்ணகிரி**<br>5/7 |

25/10/2023